செய்தி வெளியீடு எண்:491 நாள் : 01.10.2014

# செய்தி வெளியீடு
## நான்கு காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் பதக்கங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1) டாக்டர் K. பாலகிருஷ்ணன், கூடுதல் காவல் துணை ஆணையர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, திருச்சி மாநகரம், 2) திரு. கி. சண்முகம், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, காஞ்சிபுரம் மாவட்டம், 3) திருமதி. பெ. பத்மாவதி, காவல் ஆய்வாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு, திருச்சி மண்டலம், திருச்சி மற்றும் 4) திரு. மு. பாபு, காவல் உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, விழுப்புரம், விழுப்புரம் மாவட்டம் ஆகியோருக்கு, கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக காந்தியடிகள் காவலர் விருதுகள் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன விருது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2015–ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதைப் பெறுபவர்களுக்கு பதக்கங்களுடன், பரிசுத்தொகையாக தலா ரூ.20,000/–மும் வழங்கப்படும்.

அபூர்வ வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9